1978 மார்ச் 18]

எத்தனை சாலைகள் தமிழ்நாட்டில் இணைப்புச் சாலைகள் இந்த வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அரசாங்கத் திடம் குறிப்பு இருக்கிறதா? ஆலங்காயம் — போளூரை இணைப் பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதே, அது இதுவரையில் ஏன் எடுக்கப்படவில்லை? சி. ஆர். எஃப்., அதாவது, சென்ட்ரல் ரோடு ஃபண்ட் மத்திய அரசு கொடுக்கிறது. அதைத் தவிர இணைப்புச் சாலைகளுக்கு என்று வேறு ஒரு தலைப்பிலே ஏதாவது கொடுக்கப்படுகிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்புச் சாலைகளுக்கு தூர வரையறையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. 5 கிலோ மீட்டர் உள்ள அளவிற்கு இணைப்புச் சாலை போடலாம் என்ற குறிப்பு இருக்கிறது. தற்பொழுது 137.1 கிலோ மீட்டர் நீளமுள்ள 60 சாலை வேலை களை மேற்கொள்ள அரசிடம் திட்டமிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய இணைப்புச் சாலை பற்றிய குறிப்பினைப் பரிசீ லித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 621, 622 எண்களுள்ள வினுக்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்க ளின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. ஒழுங்குப் பிரச்சினை

ஒரு மானியக் கோரிக்கைமீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து.

திரு. க. சுப்பு : பாய்ன்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். அவை உரிமை மீறல் பிரச்சினையே கொண்டு வரவேண்டியது. ஆனாலும் கூட பத்திரிகைகள்மீது அடிக்கடி அவை உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரக் கூடாது என்பதால், ஒழுங்குப் பிரச்சினையாக இதைக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து

(திரு. க. சுப்பு) [1978 மார்ச் 18

நேற்றைய தினம் ''முதலமைச்சரவர்கள் கீழ்க்கண்டவாறு கோருவார் : .... 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டநிர்வாகம் பற்றிய 12-ம் எண் மானியக் கோரிக்கையின் கீழ்,........ ....தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்று கோருவார் என்று நேற்றைய நிகழ்ச்சி நிரலில் வெளியிடப்பட்டிருந்தது. நேற்று அவையிலே வைக்கப்பட்ட ஏடுகளிலே கூட என்ன, என்ன ஏடுகள் என்று கூறப்பட்டிருக்கின்றன. அறநிலையத்துறை பற்றிய மானியக் கோரிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்குமானால், அத்துறை பற்றிய விளக்கக் குறிப்புகள் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பு களில் இருக்க வேண்டுமென்று முதல்வர் சொன்ன பிறகுதான் அவை, அவைக் குறிப்பேட்டின் பகுதியாக மாறுகிறது. ஆனால், பத்திரிகையிலே படித்தது மாதிரி, 'மக்கள் குரல், பத்திரிகையிலே, முதல்வர் படித்ததைப் போல, ''தி. மு. க. ஆட்சியில் கோவில் ஊழல்கள்—முதல்வர் விளக்கினார் என்று இங்கே அவர் பேசியதைப் போலவும், விளக்கியதைப் போலவும் மூன்றாவது பக்கத்திலே பெரிய செய்தியாக வெளியிட்டிருக்கிறார் கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரியாத விவகாரங்கள், நாமே அவைக் குறிப்பிலே ஏற்றுக் கொள்ளாத விவகாரங்கள் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டிருப்பது முறை தானா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகள் மீது ஒழுங்குப் பிரச்சினை கொண்டுவர முடியாது. உரிமை மீறல் பிரச்சினைதான் எழுத்து மூலமாகக் கொண்டுவர வேண்டும். பத்திரிகைகள் மீது ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வந்தால் நான் எப்படி முடிவு கூற முடியும்? எழுதிக் கொடுத்தால், அதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு முடிவு கூறலாம். அது உரிமை மீறலா என்றுகூடப் பார்க்க வேண்டுமானால் எழுதித் தரவேண்டும்.

திரு. க. சுப்பு : நான் எழுப்புகிற பிரச்சினை வேறு. ஒரு ஒழுங்குப் பிரச்சினையை பத்திரிகை மீது கொண்டுவருவது என்பதல்ல. ஒழுங்குப் பிரச்சினை என்பது, நம்முடைய அவைக்கு வருவதற்கு முன்னே பத்திரிகைக்குப் போனதா? இல்லையென் றால், பத்திரிகை மீது உரிமை மீறல் பிரச்சினை வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பத்திரிகைமீது ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வருகிறேன் என்று சொன்னதை யொட்டிச் சொல்கிறேன். நீங்கள் அதை எழுத்து மூலமாகத் தாருங்கள். அந்த முக்கியமான பிரச்சினையை நான் கவனிக் கிறேன். அவசியம் இப்படி வருவது நம்முடைய அவை உரிமை மீறலா என்று நான் கவனிக்கிறேன்.

(திரு. சி. ஆறுமுகம் திரு. சுப்புவிடமிருந்து பெற்ற கடிதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தார்.)

திரு. ரா. உமாநாத் : இது சம்பந்தமாக, 'அசிஸ்டன்ஸுக்காக' ஒன்று சொல்கிறேன். லோக் சபாவிலே, எனக்கு எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது. ரூல்ஸ்படி ஒரு டாக்குமெண்ட்டை டேபிளிலே வைத்தாயிற்று என்று சொன்னால், It is a public document. ஆனால், ஒரு வெரிஃபிகேஷன் செய்யவேண்டும். அது என்னவென்றால், whether it has been placed on the Table of the House டேபிளிலே வைக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பது. அப்படி வைத்திருந்தால், It is a public document. That is what I learn. That is the fact. Then you can decide.

திரு. க. சுப்பு : பப்ளிக் டாக்குமெண்ட்—டேபிளிலே வைத்தால் போதும் என்று சொல்கிறார். ஆனால், இங்கே மிஸ்லீடிங்காக, பேசினார், விளக்கினார் என்ற அர்த்தத்திலே சொல்லியிருக்கிறார்கள். பேசவே இல்லை, அவர் பாவம்!

திரு. துரை முருகன் : தங்களுடைய தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன். உரிமை மீறல் பிரச்னை தரலாம் என்று சொல்கிறீர்கள். எனவே, இப்பொழுது நான் அந்தப் பத்திரிகை மீது உரிமைப் பிரச்னை தருகிறேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஏற்கனவே கொடுத்து விட்டார். ஆகவே, நீங்கள் படிக்க வேண்டாம் கொடுத்து விடுங்கள்.

(திரு. துரை முருகன் பேரவைத் தலைவரிடம் ஒரு கடிதம் கொடுத்தார்.)

திரு. ரா. உமாநாத்: உரிமை மீறல் பிரச்னையை இப்படியே, இங்கே கொடுக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே, திரு. சுப்புவுக்குச் சொன்னால், நல்லது. நான் சொன்னால்கூட ஏற்றுக் கொள்ள மாட்டார். நீங்கள் சொன்னால் நல்லது.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்........

ஒரு மானியக் கோரிக்கை மீது அவையில் விவாதம் நடைபெறாத போது அவ்விவாதம் நடந்ததாக மக்கள் குரல் நாளேட்டில் செய்தி வந்திருப்பது குறித்து

[1978 மார்ச் 18

திரு. எம். ஏ. லத்தீப் : நான் கொடுத்து, இரண்டு நாட்களாகி இருக்கிறது. அதைத் தாமதமாக எடுத்தால், பயனில்லாமல் போய்விடும். உரிமைப் பிரச்னையை நேற்றே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசியம் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. அறையிலே வந்து விவரமாகக் கேளுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, பாய்ன்ட் ஆப் கிளாரிபிகேஷன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாய்ன்ட் ஆப் கிளாரிபிகேஷன் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பாய்ன்ட் ஆப் ஆர்டர், சாரி.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் 41-வது விதியின்கீழ் கால் அட்டென்ஷன் கொடுத்தேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அறையிலே வந்து கேளுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே கேள்வி நேரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆளுங்கட்சி என்று சொல்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பாதிப் பேருக்கு மேல் அதிகமாக இருந்தாலும் கூட, நீங்கள் நேரம் ஒதுக்கித் தரவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து தலைவர் மீது குறை சொல்லக் கூடாது என்ற விதி தெரியுமா? தலைவர் மீதே குறை சொல்லக் கூடாது. உட்காருங்கள். முதலிலே அதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

(திரு. ப. சந்திரன் எழுந்தார்.)

ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டே போனால், அதை அனுமதித்தால், அவை நேரம் என்ன ஆவது? ஒன்றிரண்டு இருந்தால் பரவாயில்லை அனுமதிக்கிறேன் என்று ஒவ்வொருவரும் எழுந்தால்?.....அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.